# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3-Fundamentals of Taxation & Law

### September 2016



All Rights Reserved

# பகுதி A
# வரியியல்

## பிரிவு 01

**விடை 01**

1.1

| கற்கை வெளிப்பாடு: 3.1.2<br>கம்பனியொன்று வாடகை, வட்டி, பங்கிலாபம் மற்றும் வியாபாரம் ஆகிய மூலங்களிலிருந்தான சட்டநியதி வருமானத்தினை கணித்தலில் (கம்பனிக்கு இடையிலான ஊடுசெயல்களுக்கான செய்மையாக்கங்கள் தவிர) பிரயோகிக்கும் குறிப்பான செம்மையாக்கங்களை விபரித்தல். |
|---|
| **சரியான விடை** B |

1.2

| கற்கை வெளிப்பாடு : 5.1.4<br>வரிச் செலுத்துகைக்கும், திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கும் உரிய திகதிகளை விபரித்தல். |
|---|
| **சரியான விடை** A |

1.3

| கற்கை வெளிப்பாடு : 3.1.5<br>சிறிய அல்லது நடுத்தர அளவிலான கம்பனியொன்றின் மொத்த வருமானவரிப் பரிப்பு மற்றும் செலுத்தவேண்டிய வருமான வரி ஆகியவற்றை கணித்தல். |
|---|
| **சரியான விடை** A |

1.4

| கற்கை வெளிப்பாடு : 5.2.1<br>சிறிய அல்லது நடுத்தர அளவிலான கம்பனியொன்றிற்கு NBT யின் பிரயோகம் மற்றும் பதிவு செய்தலுக்கபன விலக்கெல்லை ஆகியவற்றை விபரித்தல். |
|---|
| **சரியான விடை** B |

1.5

| கற்கை வெளிப்பாடு : 1.2.2<br>வரியீட்டுத் தொழிற்பாடுகளும் தத்துவங்களும் |
|---|
| **சரியான விடை** C |

**மொத்தம் 10 புள்ளிகள்**

NOT FOR SALE

**விடை 02**

2.1

| கற்கை வெளிப்பாடு : 2.1.3.<br>நபர் (person), வரிமதிப்பாண்டு (year of assessment) இலாப மற்றும், மூலங்கள் ( sources of profits & income) மற்றும் வதிவிட நியதி (residence rule) ஆகிய பதங்களின் கருத்துக்களை விபரித்தல். |
|---|
| எந்தவொரு வரி மதிப்பாண்டிலும் ஒரு தனிநபர் அவரே 183 நாட்களுக்கு அதிகமான நாட்கள்இலங்கையில் இருந்தால். |

2.2

கற்கை வெளிப்பாடு : 3.1.4
சிறிய அல்லது நடுத்தர அளவிலான கம்பனியொன்றின் மொத்த வருமானவரிப் பரிப்பு மற்றும் செலுத்தவேண்டிய வருமான வரி ஆகியவற்றை கணித்தல .

| | |
|---|---|
| வரிவிதி வருமானம் | 450,000 |
| வுரி வீதம் | 12% |
| மொத்த வரிப்பரிப்பு | 54,000 |
| | |
| கழி: வரிக் கழிப்பனவுகள் | |
| சேமிப்புக் கணக்குக் கொடுப்பனவுகள் | 40,000 |
| முன்கொண்டுவரப்பட்ட ESC | 10,000 |
| செலுத்தவேண்டிய மிகுதி வரி | 4,000 |

2.3

| கற்கை வெளிப்பாடு : 4.1.2<br>ஒத்திசையாமைக்கான (non-compliance) தொடர் விளைவுகளை கூறுதல் |
|---|
| தண்டம் விதிக்கப்படும்,<br>மதிப்பிடப்பட்ட வரிமதிப்பீடு வழங்கப்படும்<br>நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படலாம் |

2.4

| கற்கை வெளிப்பாடு : 4.5.1<br>பிடித்துவைத்தல் வரித் திட்டத்தின் அம்சங்கள் (பணிப்பாளர் கட்டணம், வட்டி, பங்கிலாபம், மாணிக்கக் கற்களை ஏலவிற்பனையில் விற்றல், லொத்தர் மற்றும் ஏனைய பரிசுகள் மீதான WHT) மற்றும் பொருத்தமான இடத்து வரிக் கழிப்பனவுகள் |
|---|
| PAYE பரிப்பு 420,000/0.84 (1 புள்ளி) = 500,000<br>500,000 – 420,000 = 80,000 |

NOT FOR SALE

2.5

| கற்கை வெளிப்பாடு : 5.2.2<br>விலக்கப்பட்ட சில பொருட்கள் மற்றும் சேவைகளை (excepted articles and services) நிரற்படுத்துதல். |
| --- |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பகுதி II முதலாவது அட்டவணையில் குறிப்பிட்ட விலக்கப்பட்ட சேவைகளாவன: .<br>(i) மின்சார வினியோகம்;<br>(ii) மருத்துவச் சேவைகள்;<br>(iii) நீர் வழங்கல்<br>(iv) பொருட்கள் மற்றும் பிரயாணிகள் போக்குவரத்து.<br>(v) சினிமாப் படம் காட்டுதல்<br>(vi) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மென்பொதிகளின் விற்பனை<br>(vii) சட்டத்தின் எதிர்பார்க்கும் சேவைகள் அட்டவணையில் உள்ள வேறு ஏதாவது சேவை வழங்குதல். |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 03**

| வரிமதிப்பாண்டு 2015/2016 க்கு திரு லலித் செலுத்தவேண்டிய வருமான வரியை கணிப்பிடல் | | |
|---|---|---|
| | விலக்கு/ பரிப்பு அற்றது | பரிப்பு |
| **தொழில் வருமானம்**<br>சம்பளம்– 176,000 x 12 | | 2,112,000 |
| குடியிருப்பு (வீட்டுப்) பயன்கள்<br>(i) உரிமையாளருக்கு செலுத்திய வாடகை 60,000 x 12 =720,000<br>(ii) வரி மதிப்பு= RA + சோலைவரி 50,000 +5000 =55,000<br>(iii) (i) மற்றும் (ii) இல் அதிகமானது =720,000<br>(iv) தொழில் வருமானம் ரூபா 1,800,000 க்கு அதிகமானதால், இது ரூபா 180,000 க்கு மட்டுப்படுத்தப்படும்<br>(v) (iii) மற்றும் (iv) இல் குறைவானது 180,000 | | 180,000 |
| ஆயுட்காப்புறுதிக் கட்டணம் | | 90,000 |
| | | |
| வாகனப் படி 50,000 x 12 = 600,000<br>விலக்கு - மாதாந்தம் ரூபா 50,000/- = (600,000) | 600,000 | 0 |
| | | |
| **தொழிலிலிருந்து சட்டநியதி வருமானம்** | | **2,382,000** |
| **வாடகை வருமானம்**<br>பெற்ற மொத்த வாடகை 120,000 x 12= 1,440,000<br>கழி: சோலை வரி <u>20,000</u><br>1,420,000<br>கழி:25% தருத்தத்திற்கு <u>355,000</u><br>நிகர வாடகை 1,065,000<br>========<br>நிகர ஆண்டுப் பெறுமதி (NAV)= 100,000<br>நிகர வாடகை NAV இனைவிட அதிகமானதால்,நிகர வாடகை வரிப் பரிப்புக்கு உட்படும் | | **1,065,000** |
| **வட்டி வருமானம்**<br>• திறைசேரி உண்டியலிலிருந்து - ரூபா 63,000 இது சட்ட நியதி வருமானத்தின் பகுதி அல்ல<br>• சேமிப்புக் கணக்கிலிருந்து ஆண்டின்போது பெற்ற ரூபா 24,000. பிடித்துவைத்தல்வரி கழிக்கப்படவில்லை சேமிப்புக் கணக்கிலிருந்து மாத வட்டி ரூபா 5,000/-. க்கு குறைவானதால் விலக்களிப்புப் பெற்றது. | 63,000<br><br>24,000 | -<br><br>- |
| நிரற்படுத்திய கம்பனிப் பங்குகள் விற்பனை இலாபம் - விலக்களிப்பு | 102,000 | |
| **<u>வியாபார வருமானம்</u>** | | |
| **கணக்கின்படி நிகர இலாபம்** 2,069,000 | | |
| **கூட்டு/( கழி)-** | | |
| ஏட்டுத் தேய்மானம் – கணனி 80,000 | | |

NOT FOR SALE

| | | | |
|---|---|---|---|
| மூலதனப் படி 60,000x 25% | (15,000) | | |
| ஏட்டுத் தேய்மானம் – போட்டோப் பிரதி எந்திரம்<br>மூலதனப் படி 120,000x 331/3% | 40,000<br>(40,000) | | |
| முன்னதாக செலுத்திய வாடகை அனுமதிக்கப்படாது 480,000 – 384,000 = | 96,000 | | |
| வட்டி | 1,223,000 | | |
| அன்பளிப்பு | 10,000 | | |
| **செம்மையாக்கிய இலாபம்** | 3,463,000 | | **3,463,000** |
| **மொத்த சட்டநியதி வருமானம்** | | | **6,910,000** |
| கழி: பிரிவு 32 இன் கீழ் கழிப்பனவுகள்<br>கட்டிடம் கட்டுவதற்கு பெற்ற கடன் மீது செலுத்திய வட்டி – அனுமதிக்கப்படும்<br>தொழில் வருமானத்திலிருந்து எதுவும் கழிக்கப்பட முடியாது. எனினும் அவருக்கு **<u>போதுமான பிற மூலங்களிலிருந்து வருமானம்</u>** உள்ளது. எனவே, வட்டிக் கொடுப்பனவு கழிக்கப்படலாம். | | | 1,223,000 |
| **வரி மதிப்பு வருமானம்** | | | **5,687,000** |
| கழி: தகைமைக் கொடுப்பனவுகள்<br>கோவிலுக்கு அன்பளிப்பு அனுமதிக்கப்படாது – தகைமைக் கொடுப்பனவு அல்ல<br>ஆயுட்காப்புறுதிக் கட்டணம் - Rs.90,000<br>வரிமதிப்பு வருமானத்தின் 1/3 அல்லது 75,000/- இரண்டில் குறைந்த தொகைக்கு மட்டுப்படுத்தியது.<br><br>சமூக செயற்திட்டம்மீதான கொடுப்பனவு 1,200,000 (அதிகபட்சம் ரூபா 1 மில்லியனுக்கு மட்டுப்பட்டது)<br><br>தொழில் வருமானத்திலிருந்து எதுவும் கழிக்கப்பட முடியாது. எனினும் அவருக்கு **<u>போதுமான பிற மூலங்களிலிருந்து வருமானம்</u>** உள்ளது. எனவே, ஆயுட்காப்புறுதிக் கட்டணம் கழிக்கப்படலாம்<br><br>தொழில் வலுமானம் மீது தகைமைக் கொடுப்பனவு தனிப்பட்ட படி<br>தனிப்பட்ட படி (personal allowance) | | | -<br>75,000<br>1,000,000<br>250,000<br>500,000 |
| **வரிவிதி வருமானம்** | | | **3,862,000** |
| முதலாவது 500,000 @ 4% 20,000<br>அடுத்த 500,000 @ 8% 40,000<br>**வியாபார வருமானம் 2,230,000 @ 10%**<br>223,000<br>அடுத்த 500,000 @ 12% 60,000<br>kpFjp 132,000 @ 16% 21,120 | | | |
| **செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி** | **364,120** | | |
| **கழி:** வரிக் கழிப்பனவுகள் | | | |
| சுயமதிப்பீட்டின்கீழ் செலுத்தியது<br>PAYE | 100,000<br>103,440 | | |
| **செலுத்தவேண்டிய மிகுதி வரி** | **160,680** | | |
| | | | |

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 01

**விடை 04**

4.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 5.1.1<br>முதல்வர் - முகவர் தொடர்புமுறை ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை விபரித்தல். பரஸ்பர உடன்படிக்கையினால்; பின் உறுதிப்படுத்தலினால் (by ratification) அவசரத் தேவையின் காரணமாக, முரண்தடங்கல் மூலம் (by estoppel) |
| **சரியான விடை B** |

4.2

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: | |
| 1.4.1 | ஒவ்வொரு நிறுவகத்தினதும் ஒழுங்குபடுத்தல் வகிபாத்திரத்தை விபரித்தல். |
| 1.4.2 | இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை, காப்பாவணங்கள் பரிமாற்று ஆணைக்குழு, கொழும்பு பங்குமாற்று ஆணையம், முதலீட்டுச் சபை, கம்பனிகள் பதிவாளர், சுங்கத் திணைக்களம், மத்திய வங்கி (நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு விடயங்கள்) |
| **சரியான விடை C** | |

4.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 7.2.1<br>பணிக்கொடைக்கான உரிமையினை விபரித்தல். |
| **சரியான விடை D** |

4.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 8.2.1<br>கீழ்வரும் சட்டங்கள் ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குதல்:<br>2006 ஆண்டு 05 ஆம் இலக்க பணச்சலவைத் தடைச் சட்டம், 2006 ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனிய ஊடுசெயற் சட்டம், கணனிக் குற்றச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2003 ஆண்டு 36 ஆம் இலக்க புலமை உரிமைச் சட்டம். |
| **சரியான விடை B** |

4.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 6.3<br>குத்தகை |
| **சரியான விடை A** |

**மொத்தம் 10 புள்ளிகள்**

**விடை 05**

5.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 2.4.1 ஒப்பந்தம் முடிவுக்கு வரும் முறைகளை விபரித்தல். நிறைவேற்றுதல் மூலம்; உடன்படிக்கை மூலம்; நிலைகுலைவு காரணமாக (frustration) ; ஒப்பந்த முறிவு (breach) மூலம் (எதிர்பார்க்கும் முறிவு அடங்கலாக). |
| ஒப்பந்தமொன்று கீழ்வரும் வழிகளில் முடிவுக்கு கொண்டுவரப்படலாம் :<br><br>- நிறைவேற்றுவதன் மூலம்<br>- பின்னர் முடிவுக்குக் கொண்டுவரும் புதிய உடன்படிக்கைளை ஏற்படுதுதல் மூலம்<br>- முடிவுக்குக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுப்பதன்மூலம்.<br>- ஒரு ஒப்பந்த நிபந்தனையை முறிப்பதன் மூலம்.<br>- எதிர்பார்க்கும் ஒப்பந்த முறிவு மூலம்<br>- நிலைகுலைவு மூலம் (frustration)<br>- சட்ட ஆணை மூலம் :<br>■ ஒரு தரப்பினரின் திரவநிலை அற்றுப்போதல்<br>■ ஒரு தரப்பினரின் வங்குரோத்து நிலை<br>■ குறிப்பிட்ட காலம் (prescription period) முடிவடைதல்<br>■ மேன்மை உரிமையுடன் ஒரு கீழ்த்தர உரிமை ஒருங்குசேருதல்<br>■ ஒரு தரப்பு மறு தரப்பினருக்கு அறிவிக்காது, ஒப்பந்தத்தின் முக்கிய கட்டுறுப்பை மாற்றுதல் அல்லது இல்லாமற் செய்தல். |

5.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 1.1.1 இலங்கைச் சட்ட முறைமையின் பிரதான கிளைகளையும் அவற்றின் வகிபாகங்களையும் இனங்காண்க. |
| வழக்குத் தீர்ப்புவழிச் சட்டம் (case laws) எனப்படுவது, இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களாகும். (அதாவது உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும்)).<br><br>வழக்கு மூலங்கள் என்பதன் கருத்து, இந்தத் தீர்ப்புக்கள் சட்டங்களாக கொள்ளப்படுகின்றன. அதாவது, ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஒத்த வழக்குகளுக்கும் செல்லுபடியாகும்.<br><br>**வழக்குத் தீர்ப்புவழிச் சட்டமானது நீதியரசர் ஆக்கிய சட்டம் (Judge-made law) , நிறைவேற்றப் படாத சட்டம் (unenacted law) அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கள் (judicial decisions) எனவும் அழைக்கப்படும்..** |

NOT FOR SALE

5.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 7.3 Shop & Office Act |
| சட்டத்தின் கீழ் தாபனம் ஒன்றினை ''கடை''யாக (shop) கருதுவதற்கு கீழ்வரும் அம்சங்கள் காணப்பட வேண்டும்.<br>அது கீழ்வரும் இடமொன்றாக இருத்தல் வேண்டும் ;<br>- சில்லறை அல்லது மொத்த வியாபாம் நடைபெறும் இடம் ;<br>- தங்குமிட ஹோட்டல் (residential hotel) ;<br>- உணவு அல்லது குடிபானப் பொருட்கள் விற்பனை இடம்பெறும் இடம்;<br>- சிகை அலங்காரம் அல்லது முடிவெட்டுதல் இடம்பெறும் இடம்;<br>- குறிப்பிடப்பட்ட வேறெந்த வியாபாரம் மேற்கொள்ளப்படும் இடம். |

5.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 8.2.1<br>கீழ்வரும் சட்டங்களை சுருக்கமாக குறிப்பிடுக: 2006 ஆண்டு 05 ஆம் இலக்க பணச்சலவைத் தடைச்சட்டம், 2006 ஆண்டு 19 இலக்க இலத்திரனிய ஊடுசெயற் சட்டம், கணனிக் குற்றச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2003 ஆண்டு 36 இலக்க புலமை உரிமைச் சட்டம். |
| கொடுக்கல், வாங்கல்களை தடைசெய்யும் கட்டளையின் பிரதான அம்சங்கய்:<br>- பணச்சலவை செய்வதற்கு பயன்படுத்தும் அல்லது பயன்படுத்திவந்த கணக்கு, ஆதனம், முதலீடு தொடர்புபட்ட எதுவித ஊடுசெயல்களையும் தடைசெய்யும் கட்டளை.<br>- கொடுக்கல், வாங்கல்களை தடைசெய்யும் கட்டளையை நடைமுறைப்படுத்துவத அது மேல்நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.<br>- மேல் நீதிமன்றினால் நீடிக்கப்பட்டிருந்தாலன்றி, பொதுவாக கொடுக்கல், வாங்கல் தடைக் கட்டளை 7 நாட்களுக்கு செல்லுபடியாகும்.<br>- கொடுக்கல், வாங்கற் தடைக் கட்டளை அமுலில் இருக்கும்போது, அந்தக் தடைக்கு ஆட்பட்ட கணக்கு, ஆதனம் அல்லது முதலீட்டினை பாதிக்கும் எந்த ஊடுசெயலும் பயனற்றதும் செல்லாததுமாகும் (null and void). |

5.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 3.6.1<br>கிரய, காப்புறுதி, கேழ்வு ஒப்பந்தம் (CIF contract) மற்றும் கப்பற் தளம்வரை இலவசம் (FOB contrac) இரண்டுக்குமிடையிலான வேறுபாட்டினை இனங்காணல். |
| கிரய, காப்புறுதி, கேழ்வு ஒப்பந்தத்தின் கீழ் விற்பனையாளரின் பிரதான கடமைகளுள் சில:<br>(a) ஒப்பந்தம் கொண்டுள்ள விபரங்களுக்கு அமைய பொருட்களை வழங்குதல்.<br>(b) கடல் மார்க்கமாக பொருட்களை அனுப்பும் ஒப்பந்தத்தின்கீழ், பொருட்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட இடத்தில் (துறைமுகத்தில்) வினியோகித்தல்.<br>(c) வாங்குனருக்கு பயனளிக்கக்கூடியதாக காப்புறுதி ஒழுங்குசெய்தல்.<br>(d) பொருட்களின் விற்பனை விலைப்பட்டியலை தயாரித்தல்.<br>(e) பொருட்கள் வந்தடைந்திருப்பின் அவற்றை பெறுவதற்காக அல்லது கப்பலில் அனுப்பும் போது அவை இழக்கப்பட்டிருப்பின் அதனை ஈடுசெய்வதற்கு ஏதுவாக பொருட்களை அனுப்பி நியாயமான காலத்தினுள் கப்பல் ஏற்றுச் சீட்டு (Bill of lading), காப்புறுதிப் பத்திரம் மற்றும் விலைப்பட்டியலை வாங்குனருக்கு வழங்குதல். |

## பிரிவு 2

**விடை 06**

பகுதி (a)

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 2.1.1<br>செல்லுபடியாகும் ஒப்பந்தம் ஒன்றிற்கான தேவைப்பாடுகளை விபரித்தல். அதாவது: கொடைமுனைவு, ஏற்றுக்கொள்ளல், சட்டரீதியாக கட்டுப்படுவதற்கான நோக்கம், லெயிசியோ எனோர்மிஸ் "Laesio Enormis" கோட்பாடு அடங்கலாக தராதரமும் வடிவமும் (capacity and form). ஒப்பந்த உடன்படிக்கை, கொடைமுனைவு, ஏற்றுக்கொள்ளல், ஒப்பந்தத்திற்கான தராதரம், ஒப்பந்த வடிவம் மற்றும் சம்மத யதார்த்தம் எனும் பதங்களின் பொருள்வரையறை. |

வருணவின் வயது 18 ஆண்டிலும் குறைவானதால் அவர் ஒரு பராயமடையாதவர்.

பொதுவாக பருவமடையாதவர் சட்டரீதியாக கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தை ஏற்படுத்த முடியாது.

எனினும், ஒப்பந்தம் கல்வித் தேவைக்கானதாகவும், பராயமடையாதவருக்கு தீங்கற்றதாகவும் இருப்பின், பொது விதிக்கு விதிவிலக்காக பராயமடையாதவர் சட்டரீதியாக கட்டுப்படுத்தும் ஒப்பந்தங்களை செய்துகொள்ள முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஒப்பந்தமானது தொழிற்பயிற்சிக்கானது. அதாவது, இங்கு வருணவுக்கு நடைமுறை விடயங்கள் போதிக்கப்படும்.

எனவே, அத்தகைய ஒப்பந்தத்தினை பராயமடையாதவர் செய்துகொள்ளமுடியும். அது அவரை கட்டுப்படுத்தும்.

எனவே, வருண மாமன் கருவுடன் தொழிற்பயிற்சி ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

பகுதி (b)

தரப்பட்டுள்ள சந்தர்ப்பம் ***Neale v Merrett [1930] WN 189*** எனும் தீர்மானிக்கப்பட்ட வழக்கின் நிகழ்வுகளை ஒத்ததாகும்.

இங்கு வலிதான கொடைமுனைவு காணப்படுகின்றது.

ஒரு செல்லுபடியாகக்கூடிய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ரவியினால் தீர்க்கமான நிபந்தனையற்ற (absolute and unqualified) செல்லுபடியான ஏற்றுக்கொள்ளல் இருத்தல் வேண்டும்.

ஆனால் ரவியின் ஏற்பனவானது, நிபந்தனையுடன் கூடியதும் ஆரம்ப கொடைமுனையிலிருந்து வேறுபட்டதும் ஆதலினால், அது பதிற் கொடைமுனைவு ஆகின்றது.

பதிலாக மேற்கொள்ளும் கொடைமுனைவு அல்லது நிபந்தனையுடன்கூடிய ஏற்பனவு ஆரம்ப கொடைமுனைவினை முடிவுக்கு கொண்டுவருகின்றது.

எனவே, இங்கு மணிக்கும் ரவிக்கும் இடையில் வலிதான ஒப்பந்தம் ஏற்படவில்லை.

**10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 07**

பகுதி (a)

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 3.2.1<br>பொருட்கள் விற்பனை ஒப்பந்தத்தில் கருதப்படும் நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்களை விபரித்தல். |

**<u>உடன் காசுக்கு விற்றல் மற்றும் விற்பதற்கான உடன்படிக்கை ஆகிய இரண்டின்போதும் விற்கப்படும் பொருள் தொடர்பாக கருதப்படும் கட்டுறுப்புக்கள் கீழ்வருவனவாக இருக்கும்:</u>**

- விற்பனை ஒன்றினைப் பொறுத்தமட்டில், விற்பவர் பொருளை விற்பதற்கான உரிமையை கொண்டிருப்பார் என்பது கருதப்படும் நிபந்தனையாகும்.

- ஒரு விற்பனைக்கான உடன்படிக்கையை பொறுத்தமட்டில், விற்பனையாளர் அந்தப் பொருளின் உரித்தினை மாற்றும் தறுவாயில், அதன் விற்கும் உரிமையை கொண்டிருப்பார் என்பது ஒரு கருதப்படும் நிபந்தனையாகும்.

- இங்கு கருதப்படும் உத்தரவாதமானது, வாங்குனர் அந்தப் பொருளைப் பெற்று அதன் பலனை அனுபவிப்பார் என்பதாகும்.

- ஒப்பந்தத்தினை ஏற்படுத்த முன்னர் பொருட்கள் எந்தவித பொறுப்பிற்கோ அல்லது தடங்கல்களுக்கோ ஆளாகியிருப்பதனை வாங்குனர் தெரிந்திருக்க மாட்டார் என்பது ஒரு கருதப்படும் உத்தரவாதமாகும்.

பகுதி (b)

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 3.4.1 |

(i) <u>பிடியுரிமையை (right of lien) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பிரயோகிக்க முடியும்:</u>

- கடன் தொடர்பில் எதுவித இணக்கமுமின்றி பொருட்கள் விற்கப்பட்டபோது.
- பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டு, கடன்காலம் காலாவதியாகி இருக்கையில்.
- வாங்குனர் பணம்செலுத்த முடியாத நிலையினை அடைந்துள்ளபோது.

(ii) <u>கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பணம்செலுத்தப்படாத விற்பனையாளர் பிடியுரிமை இழப்பார்</u>.

- பொருட்களை விற்பனை செய்வதற்கான உரிமையை வழங்காது, பொருட்களை வாங்குனரிடம் ஒப்படைக்கும் பொருட்டு அவற்றை போக்குவரத்து முகவருக்கு (carrier) அல்லது அதிகாரம் பெற்றோருக்கு (Bailee) வினியோகித்துள்ளபோது.

- வாங்குனர் அல்லது முகவர் பொருட்களை சட்டரீதியாக பெற்றுள்ளபோது.
- இந்த உரிமை விலக்கப்பட்டு (waived) உள்ளபோது.

(10 புள்ளிகள்)

**விடை 08**

பகுதி (a)

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 5.4.1<br>முகவரொருவர் உண்மையான அதிகாரங்களுக்கு உட்பட்டு, போலியான தோற்றப்பாட்டு (ostensible authority) அதிகாரங்களுக்கு உட்பட்டு மற்றும் அதிகாரமின்றி மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கான பரிப்பினை கூறுதல். |

தரப்பட்ட நிலையையொத்த சம்பவம் ***Drew v Nunn* [1879] 4 Q.B.D. 661**எனும் தீர்மானிக்கப்பட்ட வழக்கில் ஆராயப்பட்டுள்ளது

வழக்கில் மனைவி கொள்வனவு செய்த உணவுப்பொருட் கிரயத்தை கணவர் செலுத்தவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பொதுவாக, முதல்வரின் சுயநினைவின்மை (mental incapacity) முகவராண்மை ஒப்பந்தத்தினை முடிவுக்குக் கொண்டுவரும்.

ஆனால், முகவர் முதல்வரின் சுயநினைவின்மை பற்றித் தெரிந்திராது மூன்றாம் தரப்பினருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் முதல்வரை கட்டுப்படுத்தும்.

எனவே, சவர் ∴புட் நிலையத்தில் சுனித்தா கடனுக்கு கொள்வனவு செய்த பொருட்களுக்கு பணம் செலுத்தவேண்டிய கடப்பாடு அநுரவுக்கு உள்ளது.

பகுதி (b)

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 5.7.5 |

பங்குடமைச் சட்டத்தில், பங்குடமை உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்தால் அன்றி, ஒரு புதிய பங்காளரை சேர்த்துக்கொள்வதற்கு சகல பங்காளர்களதும் இணககப்பாடு அவசியம்.

எல்லாப் பங்காளர்களாலும் ஏற்படுத்திக் கையொப்பமிடப்படும் பங்குடமை உடன்படிக்கை அந்த பங்குடமையின் ஆட்சிச் சாசனமாக (governing constitution) செயற்படும்.

இது ஏனைய விடயங்களுடன், குறிப்பிட்ட பங்குடமையின் பங்காளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை குறிப்பிடுகின்றது.

தரப்பட்ட சந்தர்ப்பத்தில், சுசித் பங்காளர் ஆவதனை கெவின் தடைசெய்ய முடியாது ஏனெனில், பங்குடமை உடன்படிக்கையில் குறிப்பிட்ட சரத்தானது கெவினின் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட்டமையால் ஆகும்.

**(10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பிரிவு 3

**விடை 09**

**பகுதி (a)**

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 6.1.3<br>மீயுயர் நம்பிக்கை (uberrimae fidei), அடையக்கூடிய நாட்டம் (curable interest) மற்றும் இழப்பீட்டுத் தத்துவம் (indemnity) தொடர்பாக (முழு மற்றும் பகுதிக் காப்புறுதி அடங்கலாக) காப்புறுதி ஒப்பந்த தத்துவங்களை விபரித்தல் |

காப்புறுதி பெறவிரும்பும் ஒருவர் காப்புறுதிக் கம்பனி வழங்கும் படிவம் அல்லது பிரகடனம் ஒன்றினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

அந்தப் படிவத்திலுள்ள வனாக்களுக்கு அளிக்கும் விடைகள் பொருண்மையான விடயங்கள் தொடர்பில் தவறானவையாக காணப்படின், அற்வாறு பெறப்பட்ட காப்புறுதி ஒப்பந்தம் காப்புறுதி வழங்குனரின் விருப்பின்பேரில் வலிதற்றதாக (voidable) ஆக்கப்படலாம்.

எல்லாக் காப்புறுதி ஒப்பந்தங்களிலும் மிக முக்கியமான விடயம், காப்புறுதிக்கு விண்ணப்பிப்பவர் தமது சகல பிரகடனங்களிலும் மீயுயர் நம்பிக்கையை (utmost good faith - uberrimae fidei) பிரயோகிக்கவேண்டிய கடமை அவரின் மீது விதிக்கப்பட்டுள்ளமையாகும்.

மீயுயர் நம்பிக்கைக் கோட்பாடு என்பது, காப்புறுதி வழங்குனர் தாம் எடுக்கவுள்ள இடரினை உரியமுறையில் மதிப்பாய்வு செய்வதற்கு ஏதுவாக காப்புறுதி பெற விரும்புபவர் அவருக்கு தெரிந்த அல்லது அவர் தெரிந்திருக்கவேண்டிய ஒவ்வொரு பொருண்மையான உண்மையையும் காப்புறுதி வழங்குனருக்கு தெரிவிக்கவேண்டிய கடப்பாட்டை கொண்டிருப்பது ஆகும்.

தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருண்மையான உண்மைகளை வெளிப்படுத்தவேண்டிய மீயுயர் நம்பிக்கைக் கடமையிலிருந்து பத்மன் தவறியுள்ளார்.

எனவே, அந்தக் காப்புறுதி நிராகரிக்கப்படலாம்..

பகுதி **(b)**

| |
|---|
| உரிய கற்கை வெளிப்பாடு: 4.2.1 |

**<u>காசோலையொன்றில் குறுக்குக் கோடிடுவதன் சட்டரீதியான தாக்கம்:</u>**

ஒரு காசோலையின் முகப்பில் குறுக்காக இரண்டு சமாந்தர கோடுகள் வரையப்படின் அது குறுக்குக் கோடிடலாகும். அத்துடன் அந்த சமாந்தர கோடுகளுக்கு இடையில் வாசகங்கள் எழுதப்படலாம்.

காசோலைமீது குறுக்குக்கோடிடுவதனதன் தாக்கம், அந்தக் காசோலைமீதான கொடுப்பனவு கருமபீடத்தில் அன்றி, வங்கிக் கணக்கினூடாக செலுத்தப்படவேண்டும் எனும் அறிவுறுத்தலை கொடுப்பனவு செய்யும் வங்கிக்கு வழங்குதல் ஆகும்.

**<u>குறுக்குக் கோடிடலின் வேறுபட்ட வகைகள்</u>**

நடைமுறையில் பயன்படுத்தப்படும் குறுக்குக்கோடிடலின் பிரதான வகைகள் கீழ்வருமாறு:

**பொதுவான குறுக்குக்கோடிடல் (General crossing)**:
ஒரு காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தரமான கோடுகள் வரையப்பட்டு அந்தக் கோடுகளுக்கு இடையில் ''கம்பனி'' (and company) அல்லது ''கைமாறத்தகாதது'' (not negotiabl எனும் வாசகம் எழுதப்பட்டோ அல்லது எழுதப்படாமலோ சேர்க்கப்படும் பட்சத்தில் அது பொதுவான குறுக்குக் கோடிடல் ஆகும்.

**விசேட குறுக்குக் கோடிடல் (Special crossing)**:
ஒரு காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தரமான கோடுகள் வரையப்பட்டு அந்தக் கோடுகளுக்கு இடையில் வங்கியாளரின் பெயர் எழுதப்பட்டு, ''கைமாறத்தகாதது'' எனும் பதம் சேர்க்கப்பட்டோ அல்லது சேர்க்கப்படமலோ இருப்பின், அது விசேட குறுக்குக்கோடிடலை குறிக்கும்.

**கைமாறத்தகாத குறுக்குக்கோடிடல் (Not negotiable crossing)**:
ஒருவர் ''கைமாறத்தகாதது'' எனும் சொல் சேர்க்கப்பட்ட குறுக்குக்கோடிட்ட காசோலையினை கொண்டிருப்பின் அவர் அந்தக் காசோலையை வழங்கியவரிலும் பார்க்க அதிக உரிமையை (better title) கொண்டிருக்கமாட்டார்.

**பெறுனர் கணக்குக்கு குறுக்குக்கோடிடல் (Account Payee crossing)**:
மாற்றுண்டியல் ஒழுங்குச் சட்டம் (Bills of Exchange Ordinance) இந்த வகையான குறுக்குக் கோடிடல் பற்றி குறிப்பிடாத போதிலும், இது வங்கித்துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாகும். ஒரு காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தரமான கோடுகளை வரைந்து அக்கோடுகளுக்கு இடையில் ''பெறுனர் கணக்குக்கு மாத்திரம்'' எனும் வாசகம் எழுதப்பட்டிருப்பின், அது பெறுனரின் கணக்கில் மாத்திரம் பதிவுசெய்யவேண்டும் எனும் அறிவித்தலை வங்கியாளருக்கு தெரிவிப்பதற்காகும்.

**(10 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ஃ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.